**OS.NO:104/2024**

**DW 1 :** திரு.ராஜவேலு.

நாள் : 04.02.2026

**சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு, சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.**

**வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை –**

தாவா சொத்து மொத்தம் 2 ஏக்கர் ஆகும். தாவா சொத்து ஆதியில் ரங்கசாமி என்பவருக்கு பாத்தியமாக இருந்தது. ரங்கசாமியிடம் இருந்து தாவா சொத்தினை நான், 1ம் வாதி முருகேசன் மற்றும் ஒரு தர்மன் ஆகிய மூவரும் கூட்டாக கிரையம் பெற்றோம். தர்மனிடமிருந்து தாவா சொத்தில் 3ல் 1 பாகத்தை 2ம் வாதி ஏழுமலை கிரையம் பெற்றார் என்றால், சரிதான். இன்றைய தேதி வரையில் நாங்கள் பாகப்பிரிவினை பத்திரம் எழுதி பாகம் பிரித்து கொள்ளவில்லை என்றால், சரிதான். தாவா சொத்தை 3 பாகங்களாக பிரித்து 2 பாகங்களை வாதிகளுக்கும், 1 பாகத்தை எனக்கும் கொடுக்க ஆட்சேபணை இல்லை என்றால், சரிதான். ஆனால், மத்தியில் உள்ள பாகம் எனக்கு கொடுக்க வேண்டும். தாவா சொத்திற்கு மகேஷ் என்பவரின் கிணற்றில் இருந்து தண்ணீர் இரைத்து பயிர் செய்கிறார்கள் என்றால், இல்லை. மானாவரி பயிர்தான் செய்கிறோம். நடுவில் நான் வைத்துள்ள பாகத்தில் வாழை மரங்கள் உள்ளதா என்றால், எப்போதுமே வாழை மரங்கள் இல்லை. வாதிகள் பயிர் வைத்திருந்த வாழை மரங்களை நானும், என் மனைவியும் வெட்டி சாய்த்துவிட்டோம் என்றால், அது தவறு. என் மீது போலீசார் எந்த வழக்கும் போடவில்லை. வாதிகள் பயிர் வைத்திருந்த வாழை மரங்களை நானும், என் மனைவியும் வெட்டி நாசம் செய்துவிட்டோம் என்றாலும், அதற்காக நான் ரூ.1 இலட்சம் இழப்பீடு

கொடுக்க வேண்டும் என்றாலும், அது சரியல்ல. வாதிகள் சொத்தை அனுபவிக்கக்கூடாது என்பதற்காக நான் பொய்யாக வழக்கு நடத்துகிறேன் என்றால், அது சரியல்ல.

**மறு விசாரணை –**

இல்லை.

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness and admitted by him/her to be correct.

M SELVAM

Principal District Judge, Ranipet
Digitally signed by M SELVAM
DN: cn=M SELVAM, ou=GOVERNMENT OF TAMILNADU, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN

Principal District and Sessions Judge,
Ranipet